# DEPOSITION OF WITNESS

*( XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, SIVAGANGAI.

**Prosecution:**PW.

**Deposition of witness for }**

**Defence:**

**Case No.** Sessions Case No.**SC- 121-2015**

| **Name** | வாச்சாரக்காளை | **S/o.** | சிங்கமுத்து |
|---|---|---|---|
| **Village** | சிவகங்கை | **Taluk** | சிவகங்கை |
| **Religion** | இந்து | **Calling** | |
| **Date** | 26-07-2022 | **Age** | 37 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X 1872 of the day 26.07.2022.**

**முதல் விசாரணை:**

எனக்கு சொந்த ஊர் சித்தலூர் ஆகும். நான் சிவகங்கை பாரதி நகரில் வசித்து வருகிறேன். நான் சம்பவ சமயத்தில் சக்தி சக்கரை ஆலையில் மெக்கானிக் இன்ஜினியராக வேலை செய்தேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனது மனைவி பெயர் ஆனந்தி ஆகும். எனது உடன் பிறந்தவர்கள் மூன்று சகோதரிகளும் ஒரு உடன்பிறந்த இளைய சகோதரரும் உள்ளனர். எனது மூத்த அக்காவின் பெயர் லதா, இரண்டாவது அக்காவின் பெயர் தீபா, மூன்றாவது அக்காவின் பெயர் ரூபா, எனது தம்பியின் பெயர் முருகேஸ்வரன், எனது தாயார் பெயர் முத்துராமு. 31.07.2012ம் தேதியன்று சிவகங்கையிலிருந்து எனக்கு சொந்தமான TN 65 E 6764 என்ற டாடா சுமோ காரில் நானும், எனது அக்கா தீபா, எனது தம்பி முருகேஸ்வரன், எனது அம்மா முத்துராமு ஆகியோர் சித்தலூருக்கு எனது அக்கா

ரூபா நினைவு நாளிற்கு சாமிகும்பிட சென்றோம். சிவகங்கையிலிருந்து காலை 11.00 மணிக்கு கிளம்பி சித்தலூருக்கு 11.15 மணிக்கு சென்றோம். ஏற்கனவே இரண்டு வருடங்களுக்கு முன்பு எங்கள் குடும்பத்திற்கும், சித்தலூரில் உள்ள எங்கள் வீட்டிற்கு எதிர் வீட்டிலுள்ள எதிரிகளுக்கும் நடைப்பாதை பிரச்சனை இருந்து வந்தது. சம்பவத்திற்கு நான்கு நாட்களுக்கு முன்பாக எனது அம்மாச்சி மீனாட்சியை மகாதேவன் மனைவி எதிரி பஞ்சவர்ணம் விளக்கமாற்றால் அடித்துவிட்டார். நாங்கள் பொறுமையாக இருந்துவிட்டோம். நாங்கள் சுமோவில் ஊருக்கு போய் எங்கள் வீட்டிற்கு அருகில் நிறுத்தினோம். அப்போது எங்கள் வீட்டிற்கு எதிரே உள்ள மகாதேவன், மகாதேவன் மனைவி பஞ்சவர்ணம், மகன் ராஜ்குமார், எங்கள் ஊரைச் சேர்ந்த வெள்ளைச்சாமி மகன் செல்லத்துரை, வி.புதுக்குளம் முத்துபாண்டி, எங்கள் ஊரைச் சேர்ந்த முனியாண்டி மகன் அழகுமலை ஆகியோர்கள் கையில் வைத்திருந்த வேல் கம்பு, கத்தி, கம்பி, கம்பு ஆயுதங்களுடன் ஓடி வந்து எங்களை பார்த்து எதிரி மகாதேவன் இந்த தேவடியா மகன்களை குடும்பத்துடன் குத்திக் கொல்லுங்கடா என்று சொன்னார். எனது அம்மாவை பஞ்சவர்ணமும், அழகுமலையும் பிடித்துக் கொண்டார்கள். எதிரி மகாதேவன் வைத்திருந்த வேல்கம்பால் எனது தாயார் முத்துராமுவை இடதுபக்க விலாவில் மாறிமாறிக் குத்தினார். அதை தடுக்க சென்ற என்னையும், மகாதேவன் மகன் ராஜ்குமார் கத்தியால் இடதுபக்க விலாவில் குத்தினார். செல்லத்துரை கம்பியால் எனது தலையில் ஓங்கி அடித்தார். முத்துபாண்டி கம்பால் எனது தலையில் இடதுபக்க ஓங்கி அடித்தார். ரத்தக்காயம் ஏற்படுத்தினார். தடுக்க வந்த எனது தம்பி முருகேஸ்வரனை அதே கத்தியால் இடது பக்க விலாவில் குத்தினார். எனது தாயார் மயங்கிவிழுந்துவிட்டார். எங்கள்அலறல் சத்தம் கேட்டு என் மாமா மாரிமுத்து,

முத்துகுமார், எனது அக்கா லதா, மச்சன் முத்துக்கருப்பன் ஆகியோர் ஓடி வந்து எங்களை அதே சுமோவில் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். மருத்துவமனையில் எனது தாயாரை பரிசோதனை செய்த மருத்துவர் இறந்துவிட்டதாக தெரிவித்தார். எனக்கு முதலுதவி சிகிச்சை அளித்துவிட்டு மதுரை மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி விட்டார்கள். எனது தம்பிக்கும் சிகிச்சை அளித்தார்கள். என்னிடம் காட்டப்படும் வேல்கம்பு வைத்து தான் எதிரி மகாதேவன் எனது தாயாரை குத்தினார். அந்த வேல்கம்பு ஏற்கனவே அ.த.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் கத்தியை வைத்துதான் எதிரி ராஜ்குமார் என்னை குத்தினார். அந்த கத்தி ஏற்கனவே அ.த.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் கம்பியை வைத்து தான் எதிரி செல்லத்துரை என்னை அடித்தார். அந்த கம்பி ஏற்கனவே அ.த.சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக எனது தம்பி சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தார். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் நான் மதுரை மருத்துவமனையில் இருக்கும் போது என்னை விசாரித்தார். நான் நடந்த சம்பவத்தை ஆய்வாளரிடம் கூறினேன்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-இல்லை.

## DEPOSITION OF WITNESS

*( XXIII Code of Criminal Procedure)*

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, SIVAGANGAI.**

**Prosecution:**PW.3

**Deposition of witness for }**

**Defence:**

**Case No.** Sessions Case No.**SC- 121-2015**

| **Name** | தீபா | **W/o.** | ரவிச்சந்திரன் |
|---|---|---|---|
| **Village** | சிவகங்கை | **Taluk** | சிவகங்கை |
| **Religion** | இந்து | **Calling** | |
| **Date** | 26-07-2022 | **Age** | 35 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X 1872 of the day 26.07.2022.**

**முதல் விசாரணை:**

நான் குடும்பத்துடன் சிவகங்கையில் குடியிருந்து வருகிறேன். எனது கணவர் விவசாய வேலை செய்து வருகிறார். எனது சொந்த ஊர் சித்தலூர் ஆகும். எனது கணவருக்கு சொந்த ஊர் ஆவரங்காடு ஆகும். எனது அம்மாவின் பெயர் முத்துராமு, அப்பா பெயர் சிங்கமுத்து ஆகும். எனது உடன்பிறந்தவர்களில் மூத்த அக்காவின் பெயர் லதா, எனது தங்கை பெயர் ரூபா, எனது தம்பிகள் பெயர்கள் வாச்சாரக்காளை மற்றும் முருகேஸ்வரன் ஆகும். 31.07.20112ம் தேதியன்று சிவகங்கையிலிருந்து சித்தலூருக்கு எனது தங்கை இறந்த நாளிற்கு சாமிகும்பிட சென்றோம். காலையில் 11.00 மணிக்கு சிவகங்கையிலிருந்து கிளம்பினோம். சித்தலூருக்கு 11.15 மணிக்கு போய் சேர்ந்தோம். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சிவகங்கையிலிருந்து சித்தலூருக்கு போய் இறங்கினோம். அப்போது எதிரி

மகாதேவன் வந்துவிட்டார்கள் தேவடியா மகன்கள் குத்திக் கொல்லுங்கடா என்று சொன்னார். எதிரி மகாதேவன், பஞ்சவர்ணம், அழகுமலை ஓடி வந்தார்கள். எதிரிகள் பஞ்சவர்ணமும், அழகுமலையும் எனது அம்மாவை பிடித்துக் கொண்டார்கள். எதிரி மகாதேவன் எனது தாயாரின் இடதுபக்க விலாவில் இரண்டுமுறை மாறி மாறிக் குத்தினார். எனது தம்பி வாச்சாரக்காளை வண்டியை விட்டு இறங்கி எனது தாயாரை பிடிக்க போனார். அப்போது எதிரி ராஜ்குமார் எனது தம்பி வாச்சாரக்காளையை கத்தியால் இடதுபக்க விலாவில் குத்திவிட்டார். எனது தம்பி முருகேஸ்வரன் வாச்சாரக்காளையை பிடிக்க போகும் போது அதே கத்தியால் எதிரி ராஜ்குமார் தம்பி முருகேஸ்வரனின் இடதுபக்க விலாவில் குத்தினார். நான் வண்டியை விட்டு இறங்கினேன். எனது அக்கா லதா, முத்துக்கருப்பன், மாரிமுத்து, முத்துகுமார் ஆகியோர்கள் ஓடி வந்தார்கள். அதே சுமோவில் எனது தாயார், எனது தம்பிகள் வாச்சாரக்காளை, முருகேஸ்வரன் ஆகியோர்களை தூக்கிக் கொண்டு சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு வந்தோம். அங்கு எனது தாயாரை பரிசோதனை செய்த மருத்துவர் எனது தாயார் இறந்துவிட்டதாக கூறினார். எனது தம்பி வாச்சாரக்காளையை சிகிச்சைக்காக மதுரைக்கு அனுப்பி வைத்தார்கள். எனது தம்பி முருகேஸ்வரனை இங்கேயே சிகிச்சை அளித்தார்கள். இது சம்மந்தமாக எனது தம்பி முருகேஸ்வரன் காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தார். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள். நான் நடந்ததை கூறினேன். சம்பவத்திற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பாக எங்களுக்கும், எதிரி மகாதேவன் குடும்பத்திற்கும் நடைப்பாதை சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. சம்பவத்திற்கு நான்கு நாட்களுக்கு முன்பாக எனது அம்மாச்சி மீனாட்சியை எதிரி பஞ்சவர்ணம் விளக்குமாற்றால் அடித்துவிட்டார்.

நடந்த அனைத்து சம்பவங்களையும் காவல் ஆய்வாளரிடம் கூறினேன்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-இல்லை.